22nd November 1963]

With a view to make nationalised text-books available to the students easily and in time, the agents are required according to a clause in the agreement entered into with them, to open sub-depots in each taluk by themselves or through sub-agents under their control. Similarly the agent, Madras city has to open ten sub-depots in the City. The books are also being printed according to a time schedule so that sufficient number may be available when the schools re-open after the summer vacation.

திரு. கரு. சீமைச்சாமி : பல ஏற்பாடுகள் செய்திருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூடம் திறந்து இரண்டு மாதத்திற்குள்கூடக் கிடைப்பது இல்லை. ஆகவே எப்ரல் மாதமே பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகம் செய்ய உத்தரவிட முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு சொன்னதுபோல இந்த விஷயம் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக்கூடத் துவக்க ஆண்டு

* 453 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடத் துவக்க ஆண்டினை ஜனவரியில் துவக்குவதற்கு யோசனை எதாகிலும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இது சம்பந்தமாகக் கல்வி நிபுணர்கள் அரசாங்கத்திற்குக் கருத்துக்கள் கூறியிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM . (*a*) No.

(*b*) No. In respect of colleges, a suggestion was received and communicated to the two universities for necessary action.

S.S.L.C. Examinations

* 454 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have got any proposal to reform the examination system to reduce the failures in the Secondary School Leaving Examinations; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சென்ட்ரல் அட்வைசரி போர்டில் இருந்து இந்தத் தேர்வு முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதா ? அந்த யோசனையின் மீது அரசாங்கத்தின் கருத்து என்ன ?